# 1.6 வளங்களைப் பகிர்வோம்



கடவுளின் படைப்புகளில் மனுக்குலம் மணிமுடி போன்று அதியுச்ச நிலையில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? மனித இனத்திற்கு மட்டுமே பேச்சாற்றல், எழுத்தாற்றல், சிரிக்கும் வரம், சிந்தனைத்திறன், ஆக்கத்திறன் எனப் பல்வேறு சிறப்பியல்புகள் அமையப் பெற்றுள்ளன. எனவேதான் மனுக்குலம் கடவுளின் உன்னதப் படைப்பு என்கிறோம்.

கடவுளின் இவ்வரியப் படைப்பான மனுக்குலத்திற்கென அவர் ஓர் சிறப்பு நோக்கையும் வைத்துள்ளார். **அவரின் அனைத்துப் படைப்புகளையும் பராமரிக்கவும், பாதுகாக்கவும், அவருடன் இணைந்துச் செயல்படும் பங்காளியாக மனிதரை வைத்துள்ளார்.**

எனவே, கடவுளின் திருப்பெயர் அவரின் மாண்பு நமது போற்றுதலுக்கு உரியது. அவரின் ஆளுகை நம்மால் விரும்பப்படல் வேண்டும். அவரின் அரசு நம்மால் வளர வேண்டும். அவ்வண்ணமே அவரின் அனைத்து படைப்புகளும் வளர்ச்சியடைய நாம் உழைக்க வேண்டும்.

அத்துடன் இவ்வுலகும், அதன் வளங்களும் கடவுளுடையவை. நாம் பெற்றிருக்கும் வளங்கள் மற்றும் திறமைகள் கடவுளின் கரம் வழங்கிய கொடைகளாகும். எனவே கடவுள் இவ்வுலகில் வைத்துள்ள வளங்கள் மற்றும் நாம் பெற்றுள்ள கொடைகள் மூலம் பிறர் பயன் பெறச் செய்வது நம் கடமை என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

எனவே பிறர் வாழ ''பகிர்தல்'' வேண்டும். கடவுளின் வளங்களை நேரிய முறையில் சமமாகப் பகிர்வதற்குத் தேவையான மனவுணர்வு, அறிவாற்றல், திறன் அனைத்தையும் கடவுள் நமக்கு வழங்கியுள்ளார் அல்லவா?



உமது படைப்பை அவர்கள் ஆளும் படி செய்துள்ளீர்; எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்.

(திருப்பாடல்கள் 8:6)



இலவச விநியோகத்திற்காக

மனுக்குலம் ஒற்றுமையாய் வாழவேண்டும் என்பது கடவுளின் விருப்பமாகும். ஒருமைப்பாடு, கூட்டு வாழ்வு ஆகியன கருதியே கடவுள் ஆண் பெண் இருபாலரையும் தம் சாயலில் படைத்தார். கடவுளின் ''சாயல்'' என்பது அவரது குணநலன் அல்லது தன்மை என்பதை முன்னர் அறிந்தோம்.



வாசிக்கவும் தொடக்கநூல் 1:26-28;31

கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன

இதன் அடிப்படையில் கடவுள் எப்படியெல்லாம் ஒழுங்காகவும் முறையாகவும் படைப்பு நிகழ்ச்சியைக் கையாண்டார் என்பது வெளிப்படுகிறது அல்லவா?



வாசிக்கவும்

தொடக்கநூல் 2:15

ஏதேன் தோட்டத்தை 'பண்படுத்தவும்', 'பாதுகாக்கவும்' மாந்தரை கடவுள் பணித்தார். அதன் மூலம் கடவுள் நமக்குக் கொடுத்துள்ள பெரும் பொறுப்பு உங்களுக்கு புரிகிறதா? கடவுளின் சாயலைக் கொண்டிருக்கும் நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள சூழலை அழிக்க முடியுமா? எனவே கடவுள் படைத்த சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு நீர் வழங்கக்கூடிய பங்களிப்பு என்ன?

பழைய ஏற்பாட்டின்படி, இஸ்ரயேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறினர். இடையர்களாய் இருந்த இஸ்ரயேலர், தாங்கள் குடியேறிய நாட்டில் ஏனையவரிடம் விவசாயம் கற்றுக்கொண்டனர். அவற்றை மென்மேலும் வளப்படுத்தவும் பழகிக் கொண்டனர். நீதிச்சட்டத்தின்படி 'வளப்பகிர்வு' கடவுளின் விருப்பம் என்பதையும் புரிந்து கொண்டனர்.



கடவுள்: ஏழை, அந்நியர், விதவை, அநாதை ஆகியோர் மீது அளவற்ற அன்பு கொண்டவர் என்பது பற்றி வாசிக்கவும்.
(வி. ப. 22:21 - 22,25)

உங்கள் நாட்டில் நீங்கள் பயிரிட்டதை அறுவடை செய்யும் போது, வரப்பு ஓரக்கதிரை அறுக்க வேண்டாம்; சிந்திக்கிடக்கும் கதிரையும் பொறுக்க வேண்டாம; திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு வேண்டாம்; சிந்திக்கிடக்கும் பழங்களைப் பொறுக்க வேண்டாம். அவற்றை எளியோருக்கும், அந்நியருக்கும் விட்டு விட வேண்டும் (லேவி 19:9-10).


**பயிற்சி**

மேற்கண்ட வசனங்களை வாசித்து கடவுளுடைய நீதியை விளக்கவும்.



வாசிக்கவும்

யோபு 31:15-20



யோபு தன் வாழ்வில் கடவுள் பற்று மிக்கவர் எனக் காண்கிறோம். கடவுள் பிற வளங்களையும் அவருக்கு அளித்திருந்தார். வாழ்க்கையில் சோதனை ஏற்படுவதும் வீழ்ச்சியடைய நேரிடுவதும் இயல்பே. இறைப்பற்று மிக்கோர் தம் வாழ்வில் சோதனை ஏற்படும்பொழுது சோர்ந்து போகார். யோபு தன் பிள்ளைகளையும் பொருள் வளங்களையும் பிற உடமைகளையும் இழந்தார். இச்சோதனை வேளையில் யோபுவின் மனைவி சோர்ந்து போனார். ஆயினும் யோபு மிகப் பெரியவோர் ஆன்மீகப் போராட்டத்தைப் போராடினார். தனது வாழ்வில் கடவுளுக்கு உண்மையாய் வாழ்ந்தும் இவ்விதம் துன்பம் ஏற்பட்டதேன் என தனக்குள் கேள்வி எழுப்பினார். கடவுளோடு 'இறைப்பற்றை' முன்வைத்துப் போராடலாம் என்பதற்கு யோபு சிறந்த முன்மாதிரியாவார். இருப்பினும் அவர் தமது இறைப்பற்று நிறைந்த வாழ்வில் கடவுளை ஒருபோதும் குறை கூறவில்லை. கடவுளிடமிருந்து ஒருபோதும் தீமை



இலவச விநியோகத்திற்காக

வருவதில்லை என்பது அவரது உறுதியான நம்பிக்கையாக இருந்தது. தனது அறிவை மீறிய வகையில் தனக்குள் குறைபாடு பாவம் இருக்கலாம் என உணர்ந்தார். இவரது விடாமுயற்சியுடன் கூடிய இறைப்பற்று அவரது நீதியாக எண்ணப்பட்டது.

### செயன்முறை

மேற்கண்ட பகுதியிலிருந்து யோபுவின் வாழ்க்கையை ஆய்வு செய்யவும். கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பை எடுத்துக் கூறவும்.

## மனந்திரும்புதலுக்கான அழைப்பு

கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு மக்களின் வாழ்க்கையையும் உள்மனங்களையும் ஆயத்தப்படுத்துவதற்கென தனது பணியைத் தொடங்கிய யோவான் திருமுழுக்கினர் மக்களை மனம்மாற அழைத்தார். அவர் உரையைக் கேட்டு அவரிடம் வந்த மக்கள் மனம்மாற தாம் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டனர். அதற்கு அவர்: ''உங்களிடம் இருப்பதை பிறரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்'' என்றும், ''யாரையும் ஒடுக்காதீர்கள்'' என்றும் கூறினார்.



வாசிக்கவும்

லூக்கா 3:10-14

அது போலவே ஆண்டவர் இயேசுவின் போதனைகளைக் கேட்ட மக்கள் யூத பாரம்பரியங்களை விட்டு நீங்கி ஆண்டவரின் சீடர்களாகவும் அடியவர்களாகவும் மாறினர். ஆதித் திரு அவையில் நாம் வாசித்தறிந்த வண்ணம் அவர்கள் தங்கள் வளங்களைப் பிறரிடம் பகிர்ந்துக் கொண்டனர். ஏழைகளை பராமரிப்பதில் முன் நின்றனர். ஆண்டவர் இயேசு மிக முனைப்புடன் செயலாற்றிய இறையரசு விழுமியங்களை நிறைவேற்றப் பாடுபட்டனர்.



வாசிக்கவும்


லூக்கா 16:19 -31

இப்பகுதியில் காணும், லாசரு மற்றும் செல்வச் செழிப்பான மனிதர் குறித்த உவமையின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகளை ஆய்வு செய்யவும்

இவ்வுவமையில் லாசரு மூன்றாம் உலக நாடுகளின் (வறிய நாடுகள்) பதிலாளராகக் (பிரதிநிதி) காணப்படுகிறார். லாசரு என்னும் பெயருக்கு 'கடவுள் உதவுவார்' எனப் பொருள்படும். இவ்வுவமையில் தோன்றும் செல்வர் முதலாம் உலகை (செல்வந்த நாடுகளை) நினைவூட்டுபவராக இருக்கிறார்.

இன்றைய இஸ்ரயேல் மக்கள் ஒரு சமூகமாக, ஒரு நாடாக உருவாவதற்கு முன்பு மிக அதிகமான துன்பங்களை ஏற்றனர். இக்காலகட்டத்தில் தங்கள் நடுவில் ஒருவரையொருவர் மிக அதிகமாக அன்பு கூர்ந்த ஓர் சமூகமாக வாழ்ந்ததுடன், தன்னிறைவு பெறவும், பகிரவும் பழகிக் கொண்டனர். பயன்படாத தரிசு நிலம் மிகுந்து காணப்பட்டது. இவற்றைப் பண்படுத்தி, விளை நிலமாக மாற்றுவதில் பாடுபட்டு உழைத்தனர். யோர்தானில் மேற்குப் பகுதியிலும் ஏனைய தாழ்நிலங்களிலும், எஸ்ரியேல் மற்றும் சாரோன் கடல் சார்ந்த உவர்மண் நிலங்களை பண்படுத்தி அதில் மிகப் பெரிய விளைச்சளைக் காண்பதற்கும் எபிரேய மொழியில் ''கிபூட்ஸ்'' என்னும் பெயரில் குடியிருப்புகளை அமைத்தும் வாழ்கின்றனர். உலக சனத்தொகையில் மிக வேகமாக அழிந்து வந்த ஓர் இனம் விடாமுயற்சியுடன் தங்கள் அழிவைத் தடுத்து நிறுத்திக் கொண்டதுடன், மிகவும் போராடி தமது வாழ்வை வளப்படுத்தி வருகின்றனர். ஆயினும் ஏனைய சமூகங்களுடன் இவர்கள் தங்கள் வளங்களைப் பகிர்ந்துக் கொள்ளவதில் முனைப்பு காட்ட வேண்டுமெனப் பலரும் கருதுகின்றனர்.





### உலக சனத்தொகை

*2007 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் படி உலகில் 6,602,224,175 (6.6 பில்லியன்) மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இன்று சிறிய எண்ணிக்கையிலான செல்வந்த நாடுகள் (20%) மிக அதிகளவில் வளங்களை (80%) தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளன. அதே வேளை பெரும் அளவிலான வறிய நாடுகள் (80%) சிறியளவிலான வளத்தை (20%) பகிர்ந்து கொள்வதில் போராடி வருகின்றன.*



இலவச விநியோகத்திற்காக

எனவே கடவுளின் படைப்புகளான வறிய மக்கள் தங்கள் வறுமை மற்றும் பிற தேவைகளில் இருந்து மீண்டுவர பங்களிக்க வேண்டியது நமது கடமையல்லவா? இன்று உலக நாடுகளின் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் மனித வாழ்க்கைக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக மாறி வரும் வேளையில் இயற்கையின் பேரழிவைத் தடுப்பதும், காப்பதும் நமது கடமையல்லவா?

கடவுளின் வளங்களை நேரிய வழியில் பகிரும் பொறுப்பு நம்மைச் சார்ந்து உள்ளது. கடவுள் நமக்கு வழங்கியிருக்கும் சுதந்திரம், உரிமை மற்றும் அறிவாற்றலைப் பயன்படுத்தி கடவுளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது நமது முதன்மையான கடமையாகும். இதன் மூலம் கடவுளின் படைப்புகளின் நடுவில் வளங்களை நீதியாகப் பகிருவதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெளிவாகிறது.

**செயல்பாடு**

*1* கடவுளின் வளங்களை நீதியாகப் பகிர்வதற்கு நீங்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் யாவை?

*2* பொருள் வளங்கள் தவிர நாம் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஏனைய வளங்களை அட்டவணைப் படுத்துக.

***3.*** வாசிக்கவும் திருத்தூதர் பணி 2:44 - 46
இவ்வசனங்களின் படி ஆதித் திரு அவை தங்கள் வளங்களைப் பகிர்ந்து கொண்ட சிறப்பான வாழ்க்கை முறையை ஆய்வு செய்யவும்.

*4.* ஆறுதலின் மகன் பர்னபா என்பவரின் பணி தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவும்.